# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,939—1970 දෙසැම්බර් 31 වැනි බ්‍රහස්පතින්දා—1970.12.31

14,939 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யக்கூடியதற்காக தனித் தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. .. | — | விளக்கச்சட்டங்கள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | 729 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | 729 | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 736 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாணுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 730 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் .. . | 737 |


## மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 421

என். டிஎச்/விஎவ்/17/ஏ (II)

*தரைப்படை—சி.வி.எவ்.—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாணை அமர்வு துறத்தல்*

*தரைப்படையின் இலங்கைத் தொண்டர் படையைச் சேர்ந்த கீழ்க் குறிப்பிடப்பட்ட அலுவலரது அரசாணை அமர்வு துறத்தலை 1971, சனவரி 1 ஆம் திகதியிலிருந்து அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார் :*

*லெவ்ரினன்ற் கோறல ஆச்சிலாகே குணபால அமரசேகர, சி. சி. சி.*

*அதி உத்தமரின் ஆணைப்படி,*

*ஏ. ஆர். ரத்னவேல்,*
*நிரந்தரச் செயலாளர்,*
*பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.*

*கொழும்பு,*
*1970, திசெம்பர் 17.*

*12-1094*

## மற்றைய நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 422

*பா 4/சாவி 16/121., பா 4/சாவி 14/155.,*
*பா 4/சாவி 14/154., பா 4/சாவி 2/408.,*
*பா 4/சாவி 28/177., பா 4/சாவி 4/21.,*
*பா 4/சாவி 4/20., பா 4/சாவி 4/50.,*
*பா 4/சாவி 4/44., பா 4/சாவி 6/55.,*
*பா 4/சாவி 7/63.,*

*நீதிமன்றங்கள் கட்டளைச்சட்டம்*

*82 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*(6 ஆம் அத்தியாயமான) நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் 82 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நீதியமைச்சர் ஜூசே மரியா ஜயமான்ன ஆகிய யான்—*

*1. வழக்கறிஞர் எ. கே. சந்திரதாச அவர்களை மாத்தறை நீதி நிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும், உத்தியோகப்பற்றற்ற நீதிவானொருவராகவும்,*

*2. வழக்கறிஞர் எ. ஆர். ஐ. மரிக்கார் அவர்களை மாத்தறை நீதி நிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும், உத்தியோகப்பற்றற்ற நீதிவானொருவராகவும்,*

*3. பிரேமதிலக விஜேசேகர அவர்களை காலி நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,*

---

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

*எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1970 ம் ஆண்டு யூன் மீ 2 ம் உ.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

---

4. கலெகெ பண்டிதகோராலலாகே கரிஸ்சந்திர விஜயவிக்கிரம அவர்களை காலி நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்.

5. எல்மோ ஸ்ரனிலோஸ் ஓவர்லன்ட் அவர்களை கொழும்பு நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

6. ஈனக ஜஸ்டின் சில்வா அவர்களை குருநாகலை மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

7. அமுத் முகந்திரம்கே பேஸி அபயவர்தன அவர்களை குருநாகலை மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

8. வழக்கறிஞர் ஆராச்சிகே கருணசேன அவர்களை குருநாகலை மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

9. கம்கேவகே டொன் லூகஸ் பியசேன அவர்களை நீர்கொழும்பு நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

10. மகமுகே பீலிக்ஸ் கொஸ்தா அவர்களை நீர்கொழும்பு நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்.

11. கபுறு பஸ்த பண்டாரகே டொன் கெக்ர பல்லாவலே அவர்களை நீர்கொழும்பு நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

12. வலிமுனி தேவகே கரமானிஸ் பெர்நாந்து அவர்களை நீர்கொழும்பு நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

13. டொன் டியேஸ் சுரிய ஆராச்சி அவர்களை அவிசாவலை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

14. கபுவெலே கல்லத்தலாகே பிரக்ஞாரத்ன அவர்களை அவிசாவலை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

15. இந்துறுவகே எலியஸ் தேஸ்வ அவர்களை பாணந்துறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,"

இத்தால் நியமிக்கின்றேன்.

ஜே. எம். ஜயமான்ன,
நீதியமைச்சர்.

நீதியமைச்சு,
கொழும்பு, 1970, திசெம்பர் 24.

12-1223/1

---

1970 இன் இல. 423

(20 ஆம் அத்தியாயமான) குற்றவியல் நடைமுறைச்சட்டக் கோவையின் 120 ஆம் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு, மதிப்பிற்குரிய நீதியமைச்சர் அவர்கள்—

இல. பா 4/எச்எம்பி 20/13.

(1) எச். எம். பி. சிறிசேன அவர்களை 1970.11.22 முதல் பதுளை மாவட்டத்திலுள்ள கம்பகா கோரளைக்கான திடீர் மரணவிசாரணை அதிகாரியாகவும்,

இல. பா 4/கமப 22/5.

(2) கே. காளிமுத்து அவர்களை 1971 சனவரி 1 ஆந் தேதி முதல் 1971 மே 31 ஆந் தேதிவரை இரத்தினபுரி மாவட்டத்தில் பொது சுகாதாரப் பரிசோதகர் பதவியை வகிக்கையில் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள குருவிட்ட கோரளைக்கான தற்காலிக திடீர் மரணவிசாரணையதிகாரியாகவும்,

(3) ஜே. டி. ஜே. ஒன்டாச்சி அவர்களை 1971 சனவரி 1 ஆந் தேதி முதல் 1971 மே 31 ஆந் தேதிவரை இரத்தினபுரி மாவட்டத்தில் பொது சுகாதாரப் பரிசோதகர் பதவியை வகிக்கையில் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள குருவிட்ட கோரளைக்கான தற்காலிக திடீர் மரண விசாரணை அதிகாரியாகவும்,

(4) ஆர். டபிள்யு. பியசேன அவர்களை 1970.12.12 முதல் 1971.5.9 வரை, கிரிகத்தேனை, அம்பகமுவைக் கோரளை, பெரும்பாக இறைவரி அலுவலர் பதவியை வகிக்கையில், ஹட்டன் நீதிநிருவாக மாவட்டத்திற்கான தற்காலிக திடீர் மரண விசாரணையதிகாரியாகவும்,

(5) வைத்திய கலாநிதி கே. சேனதிராசா அவர்களை 1970.12.12 முதல் 1971.5.9 வரை, தற்காலிக, வைத்திய அலுவலர் பதவியை வகிக்கையில், ஹட்டன் நீதிநிருவாக மாவட்டத்திற்கான திடீர் மரணவிசாரணை அதிகாரியாகவும்,

(6) ஈ. வேலுப்பிள்ளை அவர்களை 1970.12.12. முதல் 1971.5.9 வரை, மஸ்கெலியா, கின்டயற் பொது சுகாதார அலுவலர் (உத்சவய) பதவியை வகிக்கையில், ஹட்டன் நீதிநிருவாக மாட்டத்திற்கான திடீர் மரண விசாரணை அதிகாரியாகவும்,

(7) டி. காமினி பீரிஸ் அவர்களை 1970.12.12 முதல் 1971.5.9 வரை மஸ்கெலியா, டெல்கவுஸ், பொது சுகாதாரப் பரிசோதகர் பதவியை வகிக்கையில், ஹட்டன் நீதிநிருவாக மாவட்டத்திற்கான திடீர் மரண விசாரணையதிகாரியாகவும் நியமித்துள்ளார்கள்.

நிகால் ஜயவிக்கிரம,
நீதியமைச்சின் நிரந்தரச் செயலாளர்.

நீதியமைச்சு,
கொழும்பு, 1970, திசம்பர் 24.

12-1223/2

---

1970 இன் இல. 424

## காணி அபிவிருத்திச்சட்டப் பிரமாணம்
## (320 ன் கழ் அறிவித்தல்)

காணி அபிவிருத்திச்சட்டப் பிரமாணம் 6 (1) ம் பிரிவின் கீழ் கௌரவ மந்திரி கமதொழில் காணி அமைச்சரால் கீழே காட்டப்பட்டுள்ள காரியாதிகாரிகள் அவர்களுடைய கடமைகளுக்கு மேலாக அவர்களுடைய பெயர்களுக்கு எதிராகக் காட்டப்பட்டுள்ள மாவட்டங்களில் அதில் காட்டப்பட்டுள்ள திகதியிலிருந்து காணி அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆர். டி. ரத்னதுங்கா,
மேலதிக நிரந்தரச் செயலாளர்,
விவசாய, காணி அமைச்சு.

1970 ம் ௵ திசெம்பர் ௴ 8 ந் வ.

| பெயர் | மாவட்டம் | திகதி |
|---|---|---|
| எஸ். எம். சந்திரசேன .. | அனுராதபுரம் | 1970. 6. 6 |
| யு. டபளியூ. பண்டார .. | ஷை .. | 1970. 6. 9 |
| டபளியூ. ஏ. வணிகரத்தின .. | ஷை .. | 1970. 6.17 |
| டபளியூ. தென்னகோன் .. | ஷை .. | 1968. 7. 1 |
| கே. சிறிசேன .. .. | ஷை .. | 1970. 6. 9 |
| ஏ. எம். கருணரத்தின .. | ஷை .. | 1970. 6. 2 |
| டப்ளியூ, கஞுபகன .. | ஷை .. | 1970. 8. 3 |
| எஸ். அபேசிங்கா .. .. | ஷை .. | 1970. 6. 9 |
| ஐ. தனபால .. .. | இரத்தினபுரி | 1970.10. 2 |
| ஏ. ஐ. விகிரம .. .. | ஷை .. | 1970. 6.10 |
| ஆர். எம். பி. ஜயதிலக .. | பதுளை .. | 1970.10.10 |

12–1141

---

# அரசாங்க அறிவித்தல்கள்

எல். டி-பி 7/63

### 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டம் 6 ஏ ஆம் பிரிவின் கீழான கட்டளை

1968 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட படியான, 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 6 ஏ ஆம் பிரிவின் படி எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நிதி அமைச்சர் நாணயக்கார பத்திரகே மாட்டின் பெரேரா ஆகிய நான் மேற் குறிக்கப்பட்டுள்ள பிரிவின் (2) உப பிரிவின் முன்னேற்பாடுகள், இதற்குள்ள அட்டவணையின் II ஆம் நிரலில் ஒத்திசைவான குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து பயன்படுத்தும் வண்ணம், இதற்குள்ள அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெயருக்குப் பொருத்தப்படவேண்டியது என இக்கட்டளையின் மூலம் அறிவிக்கின்றேன்.

என். எம். பெரேரா,
நிதி அமைச்சர்.

கொழும்பு,
1970.12.19.

அட்டவணை

| நிரல் I | நிரல் II |
|---|---|
| மேல், மத்திய தென் மாகாணங்களுக்கிடையே ஒப்பளித்தார் மூல (தொலைபேசி) என் சுழற்றல் வசதிக்காகவும், தற்போதிருக்கும் தொலைச் செய்திப் போக்கு வரத்து வசதிகள் விஸ்தரிப்புக்காகவும்—திட்டம் 1, கொழும்பு வெளிப்புறப்பகுதிகளின் தொலைச் செய்திப் போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம்—இலங்கை அரசாங்கத்திற்கும் "மேசஸ் மிற்சுவி அண்ட் கொம்பனி லிமிட்டட்" க்குமிடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் சம்பந்தமானது. | 1969 ஆம் ஆண்டு செப்டம்பர் 20. |

12-1112

## சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்

### அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 30 ம் பிரிவின்படி, தனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு மதுபான, வின்னரித் தொழிற் சம்பளச் சபை, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவாறு அவ்வட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள சபையின் தீர்மானங்களை மாற்ற உத்தேசிக்கிறதென்று மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 28 ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கிறது.

மேற்கூறிய உத்தேசத்திற்கு ஆட்சேபனைகள் 1971 ம் ஆண்டு சனவரி மாதம் 15 ந் தேதி பகல் 12 மணி வரைக்கும் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனையொவ்வொன்றும் அவ்வண்ணம் ஆட்சேபித்தற்கான நியாயங்களைக் காட்டும் கூற்றொன்றினைக் கொண்டதாய் எழுத்தில் தெரிவிக்கப்பட வேண்டும்.

டபிள்யூ. எல். பி. டி. மெல்,
தலைவர்,
மதுபான, வின்னரித் தொழிற் சம்பளச் சபை.

கொழும்பு,
1970 ம் ஆண்டு டிசெம்பர் மீ 8 ந் வ.

### அட்டவணை

மதுபான, வின்னரித் தொழிற் சம்பளச் சபையால் ஆக்கப்பட்டு 1946 ம் ஆண்டு மே மாதம் 24 ந் தேதி வெளிவந்த 9,560 ம் இலக்க வர்த்தமானியில் பிரசுரமான அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டு, 1946 ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 30 ந் தேதி வெளிவந்த 9,594 ம் இலக்க வர்த்தமானியிலும், 1951 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26 ந் தேதி வெளிவந்த 10,312 ம் இலக்க வர்த்தமானியிலும், 1952 ம் ஆண்டு சனவரி மாதம் 25 ந் தேதி வெளிவந்த 10,345 ம் இலக்க வர்த்தமானியிலும், 1956 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ந் தேதி வெளிவந்த 10,976 ம் இலக்க வர்த்தமானியிலும், 1960 ம் ஆண்டு சனவரி மாதம் 15 ந் தேதி வெளிவந்த 12,036 ம் இலக்க வர்த்தமானியிலும், 1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 4 ந் தேதி வெளிவந்த 12,073 ம் இலக்க வர்த்தமானியிலும், 1970 ம் ஆண்டு மே மாதம் 22 ந் தேதி வெளிவந்த 14,907 ம் இலக்க வர்த்தமானியிலும் பிரசுரமான அறிவித்தல்களிற் குறிக்கப்பட்டவாறு மாற்றப்பட்ட தீர்மானங்கள் அவ்வட்டவணையின் II ம் பாகத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பாகத்தை இடுவதன்மூலம் மேலும் பின்வருமாறு மாற்றப்படுகின்றன :—

" II ம் பாகம்

மதுபான, வின்னரித் தொழிலின் சில செய்கை முறைகளுக்குப் பொருத்தமான துண்டு வேலைக்குரிய கீழெல்லைச் சம்பள வீதங்கள் :—

| செய்கைமுறை | வீதம் |
|---|---|
| தென்னை மரங்களைத் தொடுத்தல் .. | ஒவ்வொரு தரமும் தொடுக்க 70 சதம் |
| கயிறுகளை மாற்றுதல் .. | ஒவ்வொரு தரமும் தொடுக்க 35 சதம் |
| கயிறுகளை வெட்டுதலும் நீக்குதலும் | ஒவ்வொரு தரமும் தொடுக்க 30 சதம் |
| மரங்களுக்கு ஏணிச் சட்டம் கட்டுதல் | 110 மரங்களுக்கு மேற்படாத தோப்பு ஒன்றுக்கு ரூபா 35 |

தவறணைகளுக்குக் கள்ளு விநியோகிப்பதற்காகத் தென்னை, கித்தில் அல்லது பனை மரங்களைச் சீவுதல் :—

| செய்கை முறை | வீதம் |
|---|---|
| காலி மாவட்டத்தில் .. | தொழிலாளர் கொடுக்கும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் 54 சதம் |
| சிலாபம் மாவட்டத்தில் .. | தொழிலாளர் கொடுக்கும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் ரூபா 1.10 |
| நுவரேலியா அல்லது கண்டி மாவட்டத்தில் | தொழிலாளர் கொடுக்கும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் ரூபா 1.20 |
| மாத்தறை, யாழ்ப்பாண அல்லது மாத்தளை மாவட்டத்தில் | தொழிலாளர் கொடுக்கும் ஒவ்வாரு கலன் கள்ளுக்கும் ரூபா 1.10 |
| மேல் மாகாணத்தில் .. | தொழிலாளர் கொடுக்கும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் ரூபா 1.15 |
| புத்தளம், அநுராதபுரம், குருநாக்கல் அல்லது அம்பாந்தோட்டை மாவட்டத்தில் | தொழிலாளர் கொடுக்கும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் ரூபா 1.15 |
| பதுளை அல்லது இரத்தினபுரி மாவட்டத்தில் | தொழிலாளர் கொடுக்கும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் ரூபா 1.20 |
| மட்டக்களப்பு அல்லது மன்னர் மாவட்டத்தில் | தொழிலாளர் கொடுக்கும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் ரூபா 1.20 |
| கேகாலை மாவட்டத்தில் .. | தொழிலாளர் கொடுக்கும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் 80 சதம் |
| திருக்கோணமலை, அல்லது முல்லைத்தீவு மாவட்டத்தில் | தொழிலாளர் கொடுக்கும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் ரூபா 1.05 |
| வடிசாலைகளுக்கு அல்லது வின்னரி தயாரிப்பதற்குக் கள்ளு விநியோகிக்கும் பொருட்டுத் தென்னை, கித்தில் அல்லது பனை மரங்களைச் சீவுதல் | தொழிலாளர் கொடுக்கும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் 41 சதம் |
| வடிசாலைகளுக்கு அல்லது வின்னரி தயாரிப்பதற்குக் கள்ளு விநியோகிக்கும் பொருட்டு பூவைச் சீவுதல் | 100 தென்னை, கித்தில் அல்லது பனை மரங்களுக்கு ரூபா 62.50 ; 100 க்கு மேற்பட்ட ஒவ்வொரு மரத்துக்கும் 62½ சதம் |
| தவறணைகளுக்குக் கள்ளு விநியோகிப்பதற்காக பூவைச் சீவுதல் | 25 முதல் 40 வரையுள்ள தென்னை, கித்தில் அல்லது பனை மரங்களுக்கு ரூபா 60 |

தம்மாற் கொடுக்கப்படும் கள்ளு (கன வீதம்) நூற்றுக்கு 7·5 வீதத்திற்குக் குறையாத மதுச் சத்துக் கொண்டதாயிருத்தல் வேண்டுமென்ற நிபந்தனைக்கமையவே சாராயத் தொழிலுக்கு அல்லது வின்னரி தயாரிப்பதற்குக் கள்ளுச் சேர்த்தற்காக அமர்த்தப்பட்ட ஒவ்வொரு தொழிலாளருக்கும் தென்னை, கித்தில் அல்லது பனை மரங்கள் சீவுவதற்கெனவுள்ள மேலே கூறிய வீதங்கள் ஏற்புடையனவாகும். அவ்வகைக் கள்ளிலுள்ள மதுச் சத்து (கன வீதம்) நூற்றுக்கு 7·5 வீதத்துக்குக் குறைய இருந்தால், அவ்வகைக் கள்ளிலுள்ள மதுச்சத்து வீதத்துக்கும், 7·5 க்கும் என்ன தகவுப் பொருத்தம் இருக்கிறதோ அதே தகவுப் பொருத்தம் அக்கள்ளைச் சேர்த்த தொழிலாளருக்கும் கொடுபடும் பணத்திற்கும் மேற்குறிப்பிட்ட வீதத்துக்குமிருத்தல் வேண்டும். "

12–1078

---

## சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்

### அறிவித்தல்

*(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் படி, 1970 ம் ஆண்டு டிசெம்பர் 1 ந் தேதி தொடக்கம் மூன்று ஆண்டு காலத்திற்கு தோல் பதனிடுதல், பாத அணி, தோற் பொருட்கள் உற்பத்தித் தொடர்பாய தொழிற் சம்பளச் சபையில் உறுப்பினராயிருத்தற்கு பின்வரும் பேர்வழிகளை மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென, 1943 ம் ஆண்டுச் சம்பளச் சபை ஒழுங்கு விதிகளின் 26 ம் ஒழுங்கு விதியின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*ஏ. ஈ. கோகர்ளி மொறகொட,*
*நிரந்தரச் செயலாளர்,*
*தொழில் அமைச்சு.*

*1970 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ந் தேதி.*

நியமன உறுப்பினர்

திரு. டப்ள்யூ. பீ. தர்மசேன பர்னாந்தோ
திரு. ஆர். பீ. கே. டி. இராஜபக்ச
திரு. ஏ. பி. மெதகாவெல

வேலைக்கமர்த்துபவர்களின் பிரதிநிதிகள்

திரு. எல். ஈ. வீரசேகர
திரு. என். சி. டி. டப்ள்யூ. குணசேகர
திரு. டி. கே. இராஜபக்ச
திரு. எம். மக்கி ஆசிம்
திரு. எஸ். டி. ஈ. சமரசேகர
திரு. எஸ். ஏ. பெரேரா
திரு. டி. என். துரைராஜா
திரு. எம். கனகராஜன்
திரு. டி. சாம்சன்
திரு. எம். ஏ. சாபிடீன்
திரு. டப்ள்யூ. ஜே. இலிவேரா
திரு. பி. இஸற். பால்டிக்

தொழிலாளர்களின் பிரதிநிதிகள்

திரு. எஸ். இலெஸ்லி பர்னாந்தோ
திரு. எம். சீ. எம். ஷாபீ
திரு. ஓஸ்வின் பர்னாந்தோ

திரு. எஸ். செல்லையா
திரு. உவால்ற்றர் ஜோதிபால
திரு. எம். ஏ. அனீபா
திரு. பூஜித குணவர்தன
திரு. டப்ள்யூ. எஸ். பர்னந்தோ
திரு. என். சரணபால சில்வா
திரு. ஏ. என். ஏ. காதர்
திரு. ஏ. எச். ஏ. சமீன்
திரு. டப்ள்யூ. ஜீ. இரத்நாயக

12-1055

---

## 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உல்லாசப்பிரயாண அபிவிருத்திச்சட்டம்

### கட்டளை

1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உல்லாசப்பிரயாண அபிவிருத்திச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்கு உரித்தாக்கப் பட்ட தத்துவங்களைக் கொண்டு, கப்பற் போக்குவரத்து உல்லாசப் பிரயாண அமைச்சர், புஞ்சி பண்டா குணதிலக்க களுகல்ல ஆகிய நான், அரசாங்க நிர்வாக, உள்ளூர் ஆட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரின் ஒருப்பாட்டு டன், இக்கட்டளைக்குள்ள அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள வாடிவீட்டை இலங்கை உல்லாசப்பிரயாணச் சபைக்கு இதன்மூலம் உரித்தாக்குகின் றேன்.

பி. பீ. ஜீ. களுகல்ல,
கப்பற் போக்குவரத்து, உல்லாசப்பிரயாண அமைச்சர்.

கொழும்பு, டிசெம்பர் 22, 1970.

### அட்டவணை

மத்தியமாகாணம் நுவரெலியா மாவட்டத்திலுள்ள வலப்பனைக் காரி யாதிகாரியின் பிரிவு, ஒயப்பலாத்தையிலுள்ள ஹோர்றன் பிளெயின்ஸ் அல்லது மகா எலியாவிலுள்ளதும், வடக்கேயும் கிழக்கேயும் டியகம உபேல்ட்ஸ் என்ட் றேட்டினாலும், தெற்கே முடிக்குரிய காணியினாலும் றேட்டினாலும், மேற்கே முடிக்குரிய காணியினாலும் பாதையினாலும் எல்லைப்படுத்தப்பட்டதும், 6 ஏக்கர் 0 றூட் 17·0 பேர்ச் விஸ்தீரணமுள்ள தும், உரிமம் பெற்ற அளவையாளரும் மாவட்டவாளருமான சிறீ.டி. லியனசூரியவினால் தயாரிக்கப்பட்ட 1968 நவம்பர் 9 ஆந் தேதிய 197 ஆம் இலக்க அளவைப்படத்தினால் விளக்கிக் காட்டப்பட்டுள்ளதும், முன் னே சொல்லப்பட்ட அளவைப்படத்தில் இன்னும் விபரமாக விவரிக்கப் பட்டுள்ளதும், "பார் இன்" வாடிவீடு என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான வளவு அடங்கலும் அதைச் சார்ந்த கட்டடங்களும்.

12—1330

---

*எல். டீ—பீ. 23/63.*

## *1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டம் தேசிய அதிட்டச்சீட்டுக்கள் விதிகள்*

*1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 11 (அ), 20 ஆகிய பிரிவுகளின் கீழ்த் தேசிய அதிட்டச் சீட்டுக்கள் சபை யினால் ஆக்கப்பட்டு அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின்கீழ் நிதி யமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட விதி.*

*சீ. ஏ. குறே,*
*நிதியமைச்சு நிரந்தரச் செயலாளருக்காக.*

கொழும்பு,
*1970, டிசம்பர் மாதம் 17 ஆந் தேதி.*

### விதி

*1970, பெப்ருவரி 5 இன் 15,892 ஆம் இலக்கக் கசெற்றிற் பிரசுரிக் கப்பட்ட 1967 ஆம் ஆண்டின் தேசிய லொத்தர்கள் சபை (2) ஆம் இலக்க) விதிகள் இதனால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :*

*(1) அவற்றின் 2 ஆம் விதியில்—*

*(அ) "2 வகுப்புகள்" என்னும் வாக்கியத்துக்குப் பதிலாக "3 வகுப்புகள்" என்னும் வாக்கியத்தைச் சேர்ப்பதன் மூலமும்,*

*(ஆ) அதன் (2) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :*

*"(3) 'சிறப்பு அதிட்டச்சீட்டு' எனப்படும் தேசிய அதிட் டச்சீட்டு ; இதன் பொருட்டு ஒவ்வொன்றும் 50 சதம் விலை கொண்ட சீட்டுகள் விற்கப்படல் வேண்டும்." ;*

*(2) 4 ஆம் விதியை உடனடுத்துப் பின்வரும் புதிய விதியைச் சேர்ப்பதன் மூலமும் :*

*"4 அ 2 (3) ஆம் விதியின் கீழ்க் காட்டப்பட்டுள்ள 'சிறப்பு அதிட்டச் சீட்டு' எனப்படும் தேசிய அதிட்டச் சீட்டு சம் பந்தமாக—*

*(i) சபை தீர்மானிக்க வேண்டிய வகையில் ஒவ்வொரு ஆண்டும் பல சிறப்பு அதிட்டச்சீட்டுகள் நடைபெறல் வேண்டும் ;*

*(ii) 'சிறப்பு அதிட்டச்சீட்டில்' உள்ள ஒவ்வொரு சீட்டும் 50 சத மாக விற்கப்படல் வேண்டும் ;*

*(iii) இத்தகைய அதிட்டச்சீட்டு நடைபெறும் திகதி, நேரம் ஆகி யன ஒவ்வொரு சீட்டின் முகப்புப் புறத்தில் குறிப்பிடப்படு தல் வேண்டும் ;*

*(iv) சபையினால் தீர்மானிக்கப்பட்ட முகவர்களுக்குச் சீட்டுகள் வழங்கப்படல் வேண்டும் ;*

*(v) அத்தகைய 'சிறப்பு அதிட்டச் சீட்டுகளில்' பரிசுகள் பின் வரும் ஏற்பாடுகளின் பிரகாரம் வழங்கப்படல் வேண்டும் :*

*(அ) இவ்விதியின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய சிறப்பு அதிட்டச்சீட்டின் மொத்த வரும்படியில் 40 சதவிகிதம் மட்டுமே பரிசுகளாகப் பங்கிடு செய் வதற்கு ஒதுக்கப்படல் வேண்டும் ;*

*(ஆ) மொத்த வரும்படியில் 20 சத விகிதம் கொண்ட முதற் பரிசுத் திரட்டுத் தொகை ஒவ்வொன்றும் 5,000/- ரூபா கொண்ட பரிசுகளாகப் பிரிக்கப்படல் வேண்டும். மீதித் தொகை மொத்த வரும்படியில் 8 சத விகிதம் கொண்ட இரண்டாவது பரிசுத் திரட்டுத்தொகையுடன் சேர்க்கப்பட்டு, ஒவ்வொன் றும் 2,000/- ரூபா கொண்ட பரிசுகளாகப் பிரிக்கப் படல் வேண்டும். மீதித் தொகை மொத்த வரும் படியில் 2 சதவிகிதம் கொண்ட மூன்றாவது பரிசுத் திரட்டுத்தொகையுடன் சேர்க்கப்பட்டு, ஒவ்வொன் றும் 1,000/- ரூபா கொண்ட பரிசுகளாகப் பிரிக்கப் படல் வேண்டும். மீதித் தொகை மொத்த வரும்படி யில் 10 சதவிகிதம் கொண்ட தேற்றப் பரிசுத் திரட் டுத் தொகையுடன் சேர்க்கப்பட்டு, 50 சம பரிசு களாகப் பிரிக்கப்படல் வேண்டும்." ;*

*(3) (அ) 6 ஆம் விதியை 6 (1) ஆம் விதியாகத் திரும்ப எண் ணிடுதல் மூலமும் ;*

*(ஆ) 6 (1) ஆம் விதியை உடனடுத்துப் பின்வரும் புதிய விதி யைச் சேர்ப்பதன் மூலமும் ;*

*"6 (2) கிழிந்த, சிதைவுற்ற அல்லது உறுப்புச் சிதைந்த சீட்டுகள் எப்பரிசையும் பெறும் தகுதியுடையன வாகா ; எனினும், இத்தகைய சீட்டின் உடைமையா ளர், இவ்வித கிழிந்த, சிதைவுற்ற, உறுப்புச் சிதைந்த சீட்டு உண்மையானது என உறுதிப் படுத்துவதற்கு அழைக்கப்படக்கூடிய அரசாங்க அச்சகர், அரசாங்க இரசாயனப் பகுப்பாளர், அல் லது வேறெவருக்காவது கொடுக்க அவசியப்படுஞ் செலவுத் தொகையைச் சபையிடம் கட்டுப்பணமா கச் செலுத்தல் வேண்டும்."*

*12-1067*

---

## *1958 இன் 13 ஆம் இலக்க துறைமுக (சரக்கு) க் கூட்டுத்தாபனச் சட்டம்*

*1961 இன் 67 ஆம் இலக்க, 1964 இன் 41 ஆம் இலக்கச் சட்டங்களி னாற் திருத்தப்பட்டவாறான 1958 இன் 13 ஆம் இலக்க துறைமுக (சரக்கு) க் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 49 (2) ஆம் பிரிவினால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு, கப்பல் போக்குவரத்து சுற்றுலாப் பிரயாண மாண்புமிகு அமைச்சர், கூறப் பட்ட சட்டத்தின் 48 ஆம் பிரிவின்கீழ் புனரமைப்புச் சபை உறுப் பினர்களாக திருவாளர்கள் ஏ. சீ. கனகசிங்கம், எஸ். எம். ஏ. ஜுமா லுதீன், கே. ஜீ. இரத்தினபாலா ஆகியோரை 1970 டிசம்பர் 1 ஆந் திகதியிலிருந்து 3 மாத காலத்திற்கு திருகோணமலைத் துறைமுக முன்னைய முதலாளிகளின் மேன்முறையீடுகளை மீள ஆராய்வதற் காக மிக மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளார்.*

*மேலும் திரு. ஏ. சீ. கனகசிங்கம் அவர்கள் மேற்கூறப்பட்ட புன ரமைப்புச் சபைத் தலைவராக மாண்புமிகு அமைச்சர் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்.*

*பீ. பி. கறண்டவல,*
*நிரந்தரச் செயலாளர்,*
*கப்பல் போக்குவரத்து, சுற்றுலாப் பிரயாண அமைச்சு.*

*கப்பல் போக்குவரத்து சுற்றுலாப் பிரயாண அமைச்சு,*
*54, சதாம் வீதி,*
*கொழும்பு 1.*
*1970 டிசம்பர் 18*

*12-1065*

## உள்நாட்டு இறைவரி மீளப்பார்வைச் சபை

### வருமானவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழும் உள்நாட்டரசிறைச் சட்டத்தின் கீழும் நியமனங்கள்

கௌரவ நிதி அமைச்சரினால் வருமானவரிக் கட்டளைச் சட்டத்தின் (242 ஆம் அதிகாரம்) 74(1) என்னும் பிரிவின் கீழும் உள்நாட்டரசிறைச் சட்டம் 98(1) என்னும் பிரிவின் கீழும் கீழ்க் குறிக்கப்பட்டுள்ளவர்கள் அவர்களின் பெயரிற்கு எதிராக உள்ள தேதியிலிருந்து மூன்று வருட கால எல்லைக்கு மீளப் பார்வைச் சபையின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள் :

| | | |
|---|---|---|
| திரு. எச். சீ. குணவர்த்தன | .. | 1971.1.2 |
| திரு. சீ. பாலசிங்கம் | .. | 1971.1.2 |
| திரு. டி. பி. டி. எம். த சில்வா | .. | 1971.2.5 |

க. சிற்றம்பலம்,
நிதி அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்காக.

நிதி அமைச்சு,
1970 ம் ஆண்டு மார்கழி மீ 21 ந் வ.

12–1111/1

---

## இணக்கச் சபைகள் சட்டம்

### கட்டளை

*1959 இன் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள, 1946 இன் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47 (2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு, 1970 யூன் 16 ஆம் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4(1) என்னும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர் இரத்தினசிறி விக்கிரமநாயகா ஆகிய யான் இதன் மூலம்—*

*(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3(2) ஆம் பிரிவின் கீழ் 1969 திசம்பர் 26 ந் தேதிய 14,886 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 35 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட மாரப்பனைக் கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன்.*

*1. மாரப்பனை, மாரப்பனை வித்தியாலயத்தைச் சேர்ந்த றெபட் பொத்துவில அவர்கள்.*

*2. லெல்லொப்பிட்டி, போபெத்தையைச் சேர்ந்த கங்கபிட முறுதென் ராலலாகே சந்தனகாமி அவர்கள்.*

*3. லெல்லொப்பிட்டி, போபெத்தையைச் சேர்ந்த போபெத்த விதாநெலாகே கிறிமெனிகே அவர்கள்.*

*4. லெல்லொப்பிட்டி, வெலிமளுவையைச் சேர்ந்த தோலொஸ்வல ஆராச்சிகே ஜயசேகர அவர்கள்.*

*5. லெல்லொப்பிட்டி, கொனகும்புரவைச் சேர்ந்த கேவானம்முனி ஆராச்சிகே ஹின் மகத்மயா அவர்கள்.*

*6. லெல்லொப்பிட்டி, தெவனகம்மனையைச் சேர்ந்த கிரிலியெத்தே விதாநெலாகே கிறிமெனிகே அவர்கள்.*

*7. எல, மாவுஎல்லவைச் சேர்ந்த துன்போவிலகே டிங்கிரி முதியன்சே அவர்கள்.*

*8. லெல்லொப்பிட்டி, வெலிமளுவையைச் சேர்ந்த கடுகம்முல்லகே ஜேம்ஸ் சிங்கோ அவர்கள்.*

*9. லெல்லொப்பிட்டி, பதுல்பானை 6 ஆம் இதுக்க "ஸ்வர்ணனி" ஐச் சேர்ந்த ககந்தவல ஆராச்சிகே டொன் கரோலிஸ் அப்புகாமி அவர்கள்.*

*10. மாரப்பனை, "அழுத்வலவ்வ" ஐச் சேர்ந்த ஜயசிங்க முதியன் சேலாகே குணதாச பண்டார அவர்கள்.*

*11. மாரப்பனை, "கங்க அத்தற வலவ்வ" ஐச் சேர்ந்த வெல்லன் கட்டு முதியன்சேலாகே தென்னகோன் பண்டார அவர்கள்.*

*12. மாரப்பனை, கக்கமுவையைச் சேர்ந்த கக்கமுவ மநநல்லாகே சுவந்தரத்ன அவர்கள்.*

*13. மாரப்பனை, மாரப்பனை வித்தியாலயத்தைச் சேர்ந்த ரொபட் பொதுவல அவர்கள்.*

*14. மாரப்பனை, பகலவெலேயைச் சேர்ந்த பகல குழும்புரே கங்கானமலாகே ஹின் மகத்மயா அவர்கள்.*

*15 எல, பணகமையைச் சேர்ந்த அலுபொத ஆராச்சிலாகே நாகின்னவத்தெ டிங்கிரி மகத்மயா அவர்கள்.*

*16. இரத்தினபுரி, நிரல்கமையைச் சேர்ந்த அப்புகாமிகெ புஞ்சி அப்புகாமி ராமநாயக அவர்கள்.*

*17. உடகரவிட்ட, அலுபொதவைச் சேர்ந்த பட்டிய ஆராச்சில் லாகே அசோக குணவர்தன அவர்கள்.*

*18. இரத்தினபுரி, நிரல்கமையைச் சேர்ந்த மாட்டின் ஆதர் ராமநாயக அவர்கள்.*

*19. மாரப்பனை, ககமுவையைச் சேர்ந்த ககமுவ மனந்நலாகே சயிமன் அவர்கள்.*

*20. இரத்தினபுரி, அங்கம்மனை, விகார வீதியைச் சேர்ந்த உக்குவலாகே சிம்யோன் அவர்கள்.*

*(ஆ) மாரப்பனை, மாரப்பனை வித்தியாலயத்தைச் சேர்ந்த றெபட் பொத்துவில அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக்கின்றேன்.*

*(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டுமெனவும் நிச்சயிக்கின்றேன்.*

*இரத்தினசிறி விக்கிரமநாயக்க,*
*நீதியமைச்சரின் பாராளுமன்றச்*
*செயலாளர்.*

*நீதி அமைச்சு,*
*கொழும்பு, 1970 திசம்பர் 18.*

*12-1057*

---

## இணக்கச் சபைகள் சட்டம்

*1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47 (2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு, 1970 யூன் 16 ஆந் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர் இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான் இதற்குள்ள அட்டவணையிற் குறிப்பிட்டுள்ள இடப்பரப்புக்குள் சொல்லப்பட்ட சட்டம் நடைமுறையிலிருத்தல் வேண்டுமென இதனால் தீர்மானிக்கின்றேன்.*

*இரத்தினசிறி விக்கிரமநாயக்க,*
*நீதி அமைச்சரின் பாராளுமன்றச்*
*செயலாளர்.*

*நீதி அமைச்சு,*
*கொழும்பு, 1970 திசம்பர் 19.*

### அட்டவணை

*1. கொழும்பு மாவட்டத்திலுள்ள கொழும்பு மாநகரசபையின் கீழ்க்காணும் ஒவ்வொரு பிரிவையும் உள்ளடக்கும் பகுதி :—*

*பகுதி இல. 1. தேர்தற்பிரிவு இல. 31 குப்பியாவத்தை மேற்கு.*
*பகுதி இல. 2 தேர்தற்பிரிவு இல. 33 பொரளை வடக்கு.*
*பகுதி இல. 3 தேர்தற்பிரிவு இல. 35 பொரளை கிழக்கு.*
*பகுதி இல. 4 தேர்தற்பிரிவு இல. 36 குருந்துவத்தை.*

*12-1058*

---

## இணக்கச் சபைகள் சட்டம்

### 3 (2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

*1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47 (2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு, 1970 யூன் 16 ஆந் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1965 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள, 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (2) உட்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி, நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர், இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான் இதற்குள்ள அட்டவணையிற் குறிப்பிட்டுள்ள இடப்பரப்பு ஒவ்வொன்றுக்கும் இணக்குவோர் குழாம் ஒவ்வொன்றினை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும், அத்தகைய இடப்பரப்பு ஒவ்வொன்றினதும் இணக்குவோர் குழாத்துக்கு நியமிக்கப்படவேண்டிய ஆட்களைப் பற்றி 1971,*

பெப்புருவரி 28 ஆந் நாள் அல்லது அதற்கு முன்னர் அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழான விதப்புரைகள், பெரும்பாக அரசிறை அலுவலரின் அலுவலகத்திற் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவத்தில் எழுத்தில் எனக்குச் செய்யப்படலாமெனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.

மொரட்டுவை நகரசபைப் பகுதியின் பொருட்டு இணக்கச் சபைகள் சட்டத்தின் கீழ் 1970 ஆகத்து 28 ஆம் தேதிய 14,921 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட கசெற்றறிவித்தலை இத்தால் நீக்குகின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயக்க,
நீதியமைச்சரின் பாராளுமன்றச்
செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970 திசம்பர் 21.

அட்டவணை

1. கொழும்பு மாவட்டத்திலுள்ள மொரட்டுவை நகரசபையின் கீழ்க்காணும் வட்டாரங்களை அடக்கும் பகுதி (மொறட்டுவை வடக்கு)

வட்டார இல 1. லக்சபதிய—கல்தெமுல்லை
,, ,, 2. கட்டுப்பத்தை
,, ,, 3. ராவதாவத்தை
,, ,, 4. வில்ரொராவத்தை—மோல்பே
,, ,, 5. இந்திபெத்தை
,, ,, 6. மொரட்டுமுல்லை
,, ,, 7. இடமை

2. கொழும்பு மாவட்டத்திலுள்ள மொரட்டுவை நகரசபையின் கீழ்க்காணும் வட்டாரங்களை அடக்கும் பகுதி (மொறட்டுவை தெற்கு)

வட்டார இல. 8. உயனை
,, ,, 9. மொரட்டுவெல்லை
,, ,, 10. கொரலவெல்லை
,, ,, 11. கட்டுக்குருந்தை
,, ,, 12. எகொடவுயனை

12-1110

---

## இணக்கச் சபைகள் சட்டம்

1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47 (2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு 1970 யூன் 16 ஆந் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 4 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதியமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர், இரத்தினசிறி விக்கிரமநாயக்கா ஆகிய யான், கொழும்பு மாவட்டத்திலுள்ள உடுகககக் கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்தின் தலைவர் பதவியிலிருந்து விலக்கப்பட்ட அம்பேபுஸ்ஸ, கெபெல்லவிட்டவைச் சேர்ந்த குமார அப்புகாமிலாகே அபேசேகர அவர்களுக்குப் பதிலாக, கிதலவலான, பெத்தேகெதரவைச் சேர்ந்த பெரும்புலி ஆராச்சிகே குணதிலக அவர்களை மேற்குறிப்பிட்ட குழாத்தின் உறுப்பினராகப் பதவி வகிக்கும் காலத்துள் அதன் தலைவராகவிருக்க இத்தால் நியமிக்கின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயகா
நீதி அமைச்சரின் பாராளுமன்றச்
செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970 திசம்பர் 21.

12-1109

---

## இணக்கச் சபைகள் சட்டம்

### கட்டளை

1959 இன் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள, 1946 இன் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47(2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு, 1970 யூன் 16 ஆம் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3(1), 3(8), 4(1) என்னும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர் இரத்தினசிறி விக்கிரமநாயகா ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3(2) ஆம் பிரிவின் கீழ் 1969 திசம்பர் 26 ஆந் தேதிய 14,886 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 30 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட அம்பங்கங்கை கோரளைக் கிராமப்பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன்.

1. கம்மடுவை, கும்பல் ஒலுவையைச் சேர்ந்த கெட்டி முதியன்செலாகே முது பண்டா அவர்கள்.

2. கயிகாவலை, மெட்டிகக்கதையைச் சேர்ந்த கபுககொட்டுவே கோத் முதியன்செலாகே புஞ்சிரால கோத் அவர்கள்.

3. கம்மடுவை, கும்பல்ஒலுவையைச் சேர்ந்த கோத் முதியன்செலே அலவத்தாப்பிடியே கெதர ஜயசேன அவர்கள்.

4. கம்மடுவை, கொஸ்கொல்லையைச் சேர்ந்த அலுத்கெதர புஞ்சி பண்டா அவர்கள்.

5. கம்மடுவை, கொஸ்கொல்லையைச் சேர்ந்த எலகேநே கமராலலாகே அமுத்கெதர கிராலை அவர்கள்.

6. கம்மடுவை, தம்பககமுதுனையைச் சேர்ந்த பேரகொல்லே கெதர ஜயவர்தன பண்டா அவர்கள்.

7. கம்மடுவை இம்புல்கோல்லவைச் சேர்ந்த உடகெதர முது பண்டா அவர்கள்.

8. கம்மடுவை, புஸ்செல்லவைச் சேர்ந்த தம்பகொல்லே கெதர கருணதாச அவர்கள்.

9. ரத்தோட்டை, எகெலகஸ்தென்னையைச் சேர்ந்த கிராதுரயாலாகெதர பொதியா அவர்கள்.

10. ரத்தோட்டை, குனுகெடேவைச் சேர்ந்த கீர்திரத்ன ராஜபக்சகே விஜயரத்ன அவர்கள்.

11. கம்மடுவை, புஸ்செல்ல எலமல்தெனியே கெதர சுபசிங்க அவர்கள்.

12. மடவலஉல்பத, ஆஞ்ஞாவலையைச் சேர்ந்த கல்கொட்டுவே சொமலியா அவர்கள்.

13. மாத்தளை, ஓபல்கலையைச் சேர்ந்த கோத் முதியன்சேலாகே உடகெதர உக்கு பண்டா அவர்கள்.

14. கயிகாவெலை, மெட்டிகக்கவைச் சேர்ந்த வாசல விஜேதுங்க முதியன்சேலாகே ரகல் எல்லே கிறி பண்டா அவர்கள்.

15. கயிகாவெலை, குனுகெட்டவெலவைச் சேர்ந்த கொஸ்கக கெதர சிறிசேன அவர்கள்.

16. கயிகாவெலை, ரயிதலாவையைச் சேர்ந்த கான்சிர முதியன் சேலாகே எகொட கெதர முது பண்டா அவர்கள்.

17. ரத்தோட்டை, எகெலகஸ்தென்னையைச் சேர்ந்த ரத்தொட்ட கெதர குணரத்ன அவர்கள்.

18. கம்மடுவை, நாகுலியத்தையைச் சேர்ந்த வெடிக்காரகெதர கலு பண்டா அவர்கள்.

19. ஓபல்கலை, அம்பனையைச் சேர்ந்த வெடிக்கார கெதர யுசே அப்புகாமி இரத்தினயக அவர்கள்.

20. ரத்தோட்டை, எகெலகஸ்தென்னையைச் சேர்ந்த தமுத்தர கெதர பியதாச அவர்கள்.

(ஆ) கம்மடுவை, கும்பல்ஒலுவையைச் சேர்ந்த கெட்டி முதியந் சேலாகே முதுபண்டா அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக்கின்றேன்.

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டுமெனவும் நிச்சயிக்கின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயக,
நீதியமைச்சரின் பாராளுமன்றச்
செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970, திசம்பர் 19.

12 1224/1

## இணக்கச் சபைகள் சட்டம்
### கட்டளை

1959 இன் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள, 1946 இன் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47 (2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு, 1970 யூன் 16 ஆந் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3(8), 4 (1) என்னும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதியமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர் இரத்தினசிறி விக்கிரமநாயகா ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3(2) ஆம் பிரிவின் கீழ் 1970 யூலை 28 ஆந் தேதிய 14,916/4 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 5 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட போகொடை வடக்குச் கிராமச் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன்.

1. காலியெலே, கெதெக்ம, ஸ்ரீ சுதர்மாராமயவைச் சேர்ந்த சங்கைக்குரிய புலத்வத்தே பியதஸ்ஸ தேரோ.

2. கந்தெகெதர, லுனுகல்லே, ஸ்ரீ வித்தியாசாகர பிரிவேனையைச் சேர்ந்த சங்கைக்குரிய எல்வத்தே ரதநசார தேரோ.

3. லந்தேவெலே, கெட்டவலே, கெலவத்தகடையைச் சேர்ந்த ரத்நாயக முதியன்சேலாகே சுது பண்டா அவர்கள்.

4. லந்தெவெலே, தபாற் கந்தோர், கேமசிறி அபேசிறிவர்தன அவர்கள்.

5. லந்தெவெல, தீகல்லேயைச் சேர்ந்த பேமசிறி எதுலத் முதலி அவர்கள்.

6. லந்தெவெலேயைச் சேர்ந்த தென்னக்கோன் முதியன்சேலாகே குணசேகர அவர்கள்.

7. லந்தெவெலேயைச் சேர்ந்த தென்னக்கோன் முதியன்சேலாகே ஆரியதாச அவர்கள்.

8. காலியெலே, கெதெக்ம, எரமுதுகொல்லேயைச் சேர்ந்த திசாநாயக முதியன்சேலாகே சிறிவன்னே அவர்கள்.

9. காலியெலே, பட்டிப்பொலேயைச் சேர்ந்த திசாநாயக முதியன்சேலாகே கழு பண்டா அவர்கள்.

10. காலியெலே, கெதெக்மைவைச் சேர்ந்த ஜயசூரிய குருகே மாட்டின் அவர்கள்.

11. லந்தெவெலே, கெட்டவலே, கிம்பிலிககஆராவவைச் சேர்ந்த தென்னக்கோன் முதியன்சேலாகே அப்புகாமி அவர்கள்.

12. காலியெலே, கெதெக்மை, மீககவல்லேயைச் சேர்ந்த திசாநாயக முதியன்சேலாகே கிறி பண்டா அவர்கள்.

13. காலியெலே, கெதெக்ம, மீககவலேயைச் சேர்ந்த திசாநாயக முதியன்சேலாகே அப்புகாமி அவர்கள்.

14. லந்தெவெலே, தீகலே, "குணசிறி நிவச" ஐச் சேர்ந்த வீரசிங்க முதியன்சேலாகே தர்மசிறி விக்கிரமரத்ன அவர்கள்.

15 கந்தெகெதர, கந்துர, தெசிகொல்லேயைச் சேர்ந்த திசாநாயக முதியன்சேலாகே திசாகாமி அவர்கள்.

16. லந்தெவெலே, லுனுகல்லே, பெத்தேவெகெதரவைச் சேர்ந்த கம்கேவலாகே அந்தோனி அவர்கள்.

17. லந்தெவெலே, ஐயகுல்லேயைச் சேர்ந்த ராஜபக்ச தேவயலாகே கரோலிஸ் அவர்கள்.

18. லந்தேவெலே, வேகமை, கெவநேகெதரவைச் சேர்ந்த கம்கேவயலாகே ஜேமிஸ் அவர்கள்.

19. லந்தெவெலே, கோகொடை, மக்கும்புரவைச் சேர்ந்த சமரகோன் முதியன்சேலாகே கிறி பண்டா சமரகோன் அவர்கள்.

20. லந்தெவெலே, கிம்பிலியகக உகனகெதரவைச் சேர்ந்த ஜயசிங்க முதியன்சேலாகே ஆரியரத்ன அவர்கள்.

21. லந்தெவெலே, பநாகந்திய, தமுநுகக ஆராவேகெதரவைச் சேர்ந்த தசாநாயக முதியன்சேலாகே திசாகாமி அவர்கள்.

22. லந்தெவெலே, கோகொடையைச் சேர்ந்த ஜயசுந்தர முதியன்சேலாகே ஜயவிக்கிரம அவர்கள்.

23. லந்தெவெலே, போகொடை, "சாந்த" ஐச் சேர்ந்த கந்தபான் கொடகே மாட்டின் பீரிஸ் அவர்கள்.

24. லந்தெவெலே, கோகொடையைச் சேர்ந்த தென்னக்கோன் முதியன்சேலாகே ரம்மல்காமி அவர்கள்.

(ஆ) லந்தெவெலே, கெட்டவலே, கெலவத்தேகடையைச் சேர்ந்த ரத்நாயக முதியன்சேலாகே சுதுபண்டா அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக்கின்றேன்.

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டுமெனவும் நிச்சயிக்கின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயக்க,
நீதியமைச்சரின் பாராளுமன்றச்
செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970 திசம்பர் 22.

12-1224/2

---

## இணக்கச் சபைகள் சட்டம்
### கட்டளை

1959 இன் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள, 1946 இன் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47(2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு, 1970 யூன் 16 ஆம் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3(1), 3(8), 4(1) என்னும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக், கொண்டு, நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர் இரத்தின சிறி விக்கிரமநாயகா ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1970 யூலை 28 ஆந் திகதிய 14,916/4 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 3 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட சொரணதோட்டைக் கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன்.

1. கந்தெகெதர, புஸ்சல்லாகந்த விகாரையைச் சேர்ந்த சங்கைக்குரிய கொகானே உபசேன தேரோ.

2. கொகொவிலே, போதிறெக்பாராமயவைச் சேர்ந்த சங்கைக்குரிய எஸ். பஞ்ஞாசார தேரோ.

3. சொரணதோட்டை, கதுல்வத்தை, "குரு மெதுர" ஐச் சேர்ந்த சந்திரசிறி சிதுல்வத்த அவர்கள்.

4. கந்தகெதர, கொகானே, வியதிபிட்டியைச் சேர்ந்த பராகிரம வாசல செனவிரத்ன முதியன்சேலாகே கிரி பண்டா சமரக்கோன் அவர்கள்.

5. கந்தேகெதர, எல்வத்தை, மூகலன்கொட்டுவையைச் சேர்ந்த முதுவா பீரிஸ் கருணரத்ன அவர்கள்.

6. சொரணதோட்டை, குடுகலே, "பிரேமசிறி நிவாச" ஐச் சேர்ந்த ரத்நாயக முரியன்சேலாகே கிறிவன்தே அவர்கள்.

7. சொரணதோட்டை, கிதுல்வத்தை, "ஜய நிவச" ஐச் சேர்ந்த வீரசேகர முதியன்சேலாகே ஜயசுந்தர பண்டா அவர்கள்.

8. கந்தெகெதர, எல்வத்தை, ரட்டதொடம்கஸ்வத்தையைச் சேர்ந்த வீரகுட்டிதேவயலாகே பந்துவா அவர்கள்.

9. கிதுல்வத்தை, கொலொன்ககமட்டித்தையைச் சேர்ந்த மெனிக்கிட்டிகாமி முதியன்சேலாகே டிகிரி பண்டா அவர்கள்.

10. கந்தெகெதர, வியதிபிட்டி, கொகானே, தெகிலந்தையைச் சேர்ந்த ரத்நாயக்க முதியன்சேலாகே லொகு பண்டா அவர்கள்.

11. கந்தெகெதர, புஸ்செல்லாகந்த, "தம்மிகா சேவன" ஐச் சேர்ந்த ரத்நாயக முதியன்சேலாகே உக்கு பண்டா அவர்கள்.

12. கந்தெகெதர, இடமெகமையைச் சேர்ந்த விஜ்ஜாரத்ன கனிதயலாகே புஞ்சிசிரா அவர்கள்.

13. கந்தெகெதர, பல்லெகெட்டிய, கல்லெவெல கெதரவைச் சேர்ந்த ரத்நாயக முதியன்சேலாகே கீன் பண்டா அவர்கள்.

14. கந்தெகெதர, பல்லெகெட்டி, பல்லெவெலகெதரவைச் சேர்ந்த முதியன்சேலாகே குணசேகர அவர்கள்.

15. முத்தெட்டுவகமை, கேனயாசேவத்தையைச் சேர்ந்த ரத்நாயக முதியன்சேலாகே டிங்கிரி பண்டா அவர்கள்.

16. கந்தெகெதர, கால்பட்டியைச் சேர்ந்த ரத்நாயக முதியன்சலாகே கின் பண்டா அவர்கள்.

17. கந்தெகெதர, இடமேகமை, ககட்டககவாராவவைச் சேர்ந்த விஜேரத்ன கனிதயலாகே நிபுநா அவர்கள்.

18. கந்தெகெதர, குறிவல்லே, கொட்டுவத்தையைச் சேர்ந்த கொட்டுவத்தே உக்கு பண்டா அவர்கள்.

19. சொரணதோட்டை, வெலன்ககல்லேயைச் சேர்ந்த ஏகாநாயக ஜயசுந்தர முதியன்சேலாகே கிரி பண்டா அவர்கள்.

20. சேரணதோட்டை, மீககவெலே, யட்டிலேலேகெதரவைச் சேர்ந்த ரத்நாயக முதியன்சேலாகே சிறிவன்னே அவர்கள்.

21. பதுளை, திம்பிரிகஸ்பிட்டியைச் சேர்ந்த ரத்நாயக முதியன்சேலாகே விஜேவர்தன அவர்கள்.

22. சொரணதோட்டை, கொகொவிலே ஜயசேகெதரவைச் சேர்ந்த ஜயசேகர ஜயசுந்தர முயன்சேலாகே அபேரத்ன பண்டார அவர்கள்.

23. சொரணதோட்டை, மொரகொட்டுவை, கல்கந்தையைச் சேர்ந்த ரத்நாயக முதியன்சேலாகே பொடியப்புகாமி அவர்கள்.

24. கந்தெகெதர, கொகொவிலே, "குணசிறி நிவச" ஐச் சேர்ந்த ராஜபக்ச முதியன்சேலாகே கிரி பண்டா அவர்கள்.

25. கந்தெகெதர, கொகொவிலே, பிட்டவத்தையைச் சேர்ந்த ரத்நாயக முதியன்சேலாகே அங்கதி அவர்கள்.

26. சொரணதோட்டை, கொகொவிலே, அகுறுமெல்கெதரவைச் சேர்ந்த கேன்நாயக முதியன்சேலாகே அபேரத்ன அவர்கள்.

27. சொரணதோட்டை, கொகொவிலே, நயித்தராவவைச் சேர்ந்த ரத்நாயக முயன்சேலாகே கருணதாச அவர்கள்.

28. கந்தெகெதர, கொகொவிலகந்துர, "எலேகெதர" ஐச் சேர்ந்த அத்தநாயக முதியன்சேலாகே பியசேன அவர்கள்.

29. சொரணதோட்டை, கொகொவிலே, "அபய" ஐச் சேர்ந்த இலுக்வல்லே கெதர அபேரத்ன அவர்கள்.

30. பதுளை, ரிதிபானையைச் சேர்ந்த கேவயலாகே வீரசிங்ககே எல்ஜெனிஸ் சிங்கோ அவர்கள்.

31. சொரணதோட்டை, கொகொவிலே, சிறிமெடியகெதரவைச் சேர்ந்த சமரகோன் முதியன்சேலாகே புஞ்சி பண்டா அவர்கள்.

32. பதுளை, திம்பிரிகஸ்பிட்டியைச் சேர்ந்த பிரேமவர்தன முனிந்தாச திசாநாயக அவர்கள்.

(ஆ) சொரணதோட்டை, கிதுல்வத்தை, "குரு மெதுர" ஐச் சேர்ந்த சந்திரசிறி சிதுல்வத்த அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக்கின்றேன்.

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிப்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டுமெனவும் நிச்சயிக்கின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயக்க,
நீதியமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970 திசம்பர் 22.

12-1224/3

---

## நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

மாத்தறை நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் நொத்தாரிசுவாகக் கடமைபார்க்க அனுமதி பெற்றுள்ள எலியஸ் சொலமன் பொன்சேகா அவர்கள், 107 ம் அத்தியாயமான நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் 22(1 ம்) பிரிவின் கீழ் 1970 ஆு நவம்பர் மாதம் 15 ம் திகதி தொடக்கம் நொத்தாரிசு பதவியிலிருந்து ராஜிநாமாச் செய்வதாக அனுப்பிய கடிதம், கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் மேற்படி திகதியிலிருந்து ஏற்றுக் கொள்ளப்பட்டது.

12-1226

---

## 1954 ம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச்சட்டம்

### 49 ம் பிரிவின் கீழான சான்றிதழ்

1954 ம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச் சட்டத்தின் 49 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி, வீடமைப்பு நிர்மாண அமைச்சர் பீற்றர் ஜெரல்ட் பத்தோலோமியுஸ் கெனமன் ஆகிய நான், மேற்கூறப்பட்ட அதிகாரச் சட்டத்தின் 2 ம் பிரிவின் அடிப்படையில் வீடமைக்கும் நோக்கமாகக் கீழ்க்காணப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட வேண்டுமென இத்தால் அத்தாட்சிப் படுத்துகிறேன்.

பீ. ஜீ. பீ. கெனமன்,
வீடமைப்பு, நிர்மாண அமைச்சர்.

கொழும்பு,
1970.12.14.

### அட்டவணை

மேல்மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு பெ. இ. உ. பிரிவிலும் கொம்பனி வீதி கிராமசேவகர் பிரிவிலும் அமைந்துள்ள ஸ்டிவாட் தெருவில் 50 ம் வரிமதிப்பு இலக்கம் கொண்டதும் கிட்டத்தட்ட 138 பேர்சஸ்கள் விஸ்தீரணமுள்ளதுமான காணித் துண்டு ஒன்று, அதன் எல்லைகள் பின்வருமாறு :

வடகிழக்கு—ஸ்டிவாட் தெரு.
தென்கிழக்கு—திருவாளர்கள் ஈ. பீ. கிறீசி அண்ட் கம்பனியின் வீடுவளவுகள்.
தென்மேற்கு—றெயில் வீதி.
வடமேற்கு—ஸ்டிவாட் தெரு, 48 ம் இலக்க வீடுவளவுகள்.

12-1063

---

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### 25 சதப் பெறுமதியுடைய முத்திரைகளின் வெளியீடு

#### விற்பனைக்காக மறு வெளியீடு

சிகிரியாக் குகையோவியங்களைக் குறிக்கும் 25 சதப் பெறுமதியுடைய அஞ்சல், இறைவரி முத்திரைகள் 1971 ம் ஆண்டு ஜனவரி 1 ம் திகதியிலிருந்து விற்பனைக்காக, மறு வெளியீடு செய்யப்படும் என்பதை இத்தால் பொது அறிவித்தலாக அறியத்தரப்படுகின்றது.

இறைவரித் திணைக்களம்,
கொழும்பு 1,
21, டிசம்பர் 1970.

ச. சிற்றம்பலம்,
இறைவரி ஆணையாளர்.

12-1135

---

எல். டீ—பீ 60/34

## சுங்க அறிவித்தல் தடைமுறி இல. 4/70

### சுங்கக் கட்டளைச் சட்டம்

(235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 69 ஆம் பிரிவால் எனக்கு உரித்தக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, சுங்கப் பிரதான சேகரிப்பாளர், விஜய பெறெரு விற்ருச்சி ஆகிய நான், அப்பிரிவினால் நிதியமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு வழங்கப்பட்ட அவருடைய அங்கீகாரத்துடன் அவருடைய தற்றுணிபுக்கிணங்கப் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தல் மூலம், (54′4″ × 30′7″ × 16′ ஆகிய அளவைகளைக் கொண்ட) கொழும்பு, கொம்பனித் தெரு வேகந்த தெருவில் அமைந்த நிர். 2 இல் உள்ள களஞ்சியத்தில், இலங்கை வங்கியினால் இறக்குமதி செய்யப்படும் பொதுப் பண்டங்களை முதல் தீர்வைப் பத்திரத்தில் தீர்வைக் கொடுப்பனவு செய்யாது அங்கு வைத்துப் பாதுகாப்புச் செய்வதற்காக அங்கீகரித்து நியமிக்கிறேன்.

கொழும்பு,
1970 ம் ஆு டிசம்பர் மீ 11 ந உ.

வீ. பீ. விற்ருச்சி,
பிரதான சுங்க சேகரிப்பாளர்.

12–1111/2

---

எல். டி. பீ 60/34

## சுங்க அறிவித்தல் தடைமுறி இல. 3/70

### சுங்கக் கட்டளைச் சட்டம்

235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 69 ம் பிரிவால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, சுங்கப் பிரதான சேகரிப்பாளர், விஜய பெறெரு விற்ருச்சி ஆகிய நான், அப்பிரிவினால் நிதியமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு வழங்கப்பட்ட அவருடைய அங்கீகாரத்துடன் அவருடைய தற்றுணிபுக்கிணங்கப் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தல் மூலம், (60′ 5″ × 17′ × 12′5″ ஆகிய அளவைக் கொண்ட) ஜம்பெற்று தெரு, கொழும்பில் அமைந்த நிர். 89/55, 89/57 ஆகியவற்றில் உள்ள களஞ்சியத்தில் இலங்கைப் புகையிலைக் கம்பனியால் இறக்குமதி செய்யப்படும் சிகரட்டு, பைப் புகையிலை, மதுபானம் ஆகியவற்றை முதல் தீர்வைப் பத்திரத்தில் தீர்வை கொடுப்பனவு செய்யாது அப்பொருட்களை அங்கு வைத்துப் பாதுகாப்புச் செய்வதற்காக அங்கீகரித்து நியமிக்கிறேன்.

கொழும்பு,
1970 ம் ஆு டிசம்பர் மீ 11 ந உ.

வீ. பீ. விற்ருச்சி,
பிரதான சுங்க சேகரிப்பாளர்.

12–1111/3

எல். டீ. பி 60/34

### சுங்க அறிவித்தல் தடைமுறி இல. 5/70
### சுங்கக் கட்டளைச்சட்டம்

*(235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 69 ஆம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, சுங்கப் பிரதான சேகரிப்பாளர் விஜய பெறேரு விற்ருச்சி ஆகிய நான் அப்பிரிவினுல் நிதியமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு வழங்கப்பட்ட அவருடைய அங்கீகாரத் துடன் அவருடைய தற்றுணிபுக்கிணங்கப் பிரசுரிக்கப்படும் இவ் வறிவித்தல் மூலம் (13' 9" × 9' 10" × 7' ஆகிய அளவைகளைக் கொண்ட) குமாரன் இரத்தினம் தெருவில் அமைந்த நிர் 98/11 இல் உள்ள அறையில் ஜெ. ஏ. டி விக்ரோறியா ஸ்தாபனத்தாரால் இறக்குமதி செய்யப்படும் குடிவகையை (தானியக் குடிவகை உட்பட) முதல் தீர்வைப் பத்திரத்தில் தீர்வை கொடுப்பனவு செய்யாது அங்கு வைத்துப் பாதுகாப்புச் செய்வதற்காக அங்கீகரித்து நியமிக்கிறேன்.*

*வி. பி. விற்ருச்சி,*
*பிரதான சுங்க சேகரிப்பாளர்.*

*கொழும்பு,*
*1970 ம் ஆண்டு தெசம்பர் மீ 11 ந் தேதி.*

*12-1062*

---

### பிரகடனம்

*அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த வெவகம் பற்று பகுதியில் விசர்நாய் அபாயம் இருப்பதால் இம்மாவட்ட அரசாங்க அதிபர் ரூபின் பிறட்மன் வீரகோன் ஆகிய நான் விசர் நாய்ச் சட்டத்தின் (இலங்கை சட்ட நிருபண சட்டத்தின் 476 ம் அத்தியாயம் தொகுப்பு 12) 11 ம் பிரிவின் (1ம்) 2 ம் பிரிவின் பிரகாரம் விசர் நாய் அபாயம் இருக்கும் பகுதிகளாக இவற்றைப் பிரகடனப் படுத்துகிறேன்.*

*மேற்கூறிய பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளிலுள்ள சொந்தக் கட்டிடங்களிலோ, தோட்டங்களிலோ தவிர்ந்த வேறு பொது இடங்களிலோ, தெருக்களிலோ கட்டப்படாமல் அல்லது வழி நடத்தப்படாமல் இருக்கும் எந்த ஒரு நாயும், விசர் நாய்ச் சட்டத்தின் 11 (2) ம் பிரிவின் கீழ் (இலங்கைச் சட்ட நிருபண சட்டத்தின் 476 ம் அத்தியாயம் தொகுப்பு 12) அழிக்கப்பட ஏது வாகும்.*

*ஆர். பி. வீரக்கோன்,*
*அரசாங்க அதிபர்,*
*அம்பாறை மாவட்டம்.*

*கச்சேரி,*
*அம்பாறை,*
*14. 12. 70.*

*12-1068*

---

## "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள்

### 1970–71 ல் நடைபெறவிருக்கும் உள்ளூர் விருப்பத்தெரிவு வாக்களிப்பு—கொழும்பு மாவட்டம்

கீழ் உள்ள அட்டவணையில் காணும் கள்ளுத் தவறணைகளுக்கான அனுமதிப்பத்திரத்தை, 1971 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ந் திகதியிலிருந்து நீக்கிவிடுவதற்காக நடாத்தப்படும் தேர்தலில், கடைசியாகத் தயாரிக்கப்பட்ட வாக்காளர் இடாப்பில் தமது பெயர்களை உடைய வாக்காளர் தொகையில் நூற்றிற்கு இருபத்தைந்து வீதத்திற்கும் குறையாமல் வாக்களித்திருப்பதையும், அப்படியாக வாக்களித்தவர்களில் பெரும்பாலானோர் மேற்படி அனுமதிப்பத்திர நீக்கத்திற்கு அனுசரணையாக வாக்களித்தார்களா என்பதைப் பதிவு செய்து உண்மையை அறிந்து கொள்ளுதற்குமாக, 180, 187, 194, 221, 225, 231, 401, 483, 522 ம் இலக்க மதுவரி அறிவித்தல்களினுல் திருத்தப்பட்ட, 1925.8.14 ம் திகதிய 7,478 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் 146 ம் இலக்க மதுவரி அறிவித்தலின் 6 ம் விதியின் பிரகாரம் கீழ் சொல்லப்படும் இடத்தையும், திகதியையும் நியமிப்பதாக இத்தால் அறிவித்தல் தரப் படுகின்றது.

#### அட்டவணை

**தவறணையின் பெயர் :** கொழும்பு மாநகரசபையிலுள்ள கொட்டாஞ்சேனை மேற்கு வட்டார கொட்டபோம் 1 ம் இலக்க கள்ளுத் தவறணையும் ஸ்கின்னர்ஸ் ரோட் 2 ம் இலக்க கள்ளுத் தவறணையும்.

**திகதி :** 1971 ம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ந் திகதி.

**நேரம் :** மு. ப. 8 மணியிலிருந்து நண்பகல் 12 மணி வரையும்
பி. ப. 1 மணியிலிருந்து பி. ப. 6 மணி வரையும்.

**வாக்களிப்பு நிலையம் (1) :** கொட்டாஞ்சேனை வீதியிலுள்ள கதீற்றல் கல்லூரி

இவ்வாக்களிப்பு நிலையத்திற்கான வாக்காளர் இடாப்பிலுள்ளோர் இலக்கம் 1 முதல் 3006 வரையும்.

**வாக்களிப்பு பிரதேசம் :** (கொட்டாஞ்சேனை மேற்கு வட்டாரத்தில்)
கல்லூரி வீதி (92–104 வரையிலுள்ள இரட்டை இலக்கங்கள்)
ஜினனந்த மாவத்த (17–49எ வரையிலுள்ள ஒற்றை இலக்கங்கள்)
கொட்டாஞ்சேனை வீதி (5–159 வரையிலுள்ள ஒற்றை இலக்கங்கள்)
பிக்கரிங்ஸ் ரோட் (97–203 வரையிலுள்ள ஒற்றை இலக்கங்களும் 50/2–256 வரையிலுள்ள இரட்டை இலக்கங்களும்)
ஸ்ரீகுணனந்த மாவத்த (சந்தியாகு வீதி) (10–194/4 வரையிலுள்ள இரட்டை இலக்கங்களும் 5–35 வரையிலுள்ள ஒற்றை இலக்கங்களும்)
11 ம் ஒழுங்கை (6–15 வரையிலுள்ள ஒற்றை, இரட்டை இலக்கங்கள்)
12 ம் ஒழுங்கை (1 ம் இலக்கம்)
13 ம் ஒழுங்கை (ஒற்றை இரட்டை இலக்கங்கள்)
14 ம் ஒழுங்கை (3–27/4 வரையிலுள்ள ஒற்றை இரட்டை இலக்கங்கள்)
பொன்ஜீன் ரோட் (1–61 வரையிலுள்ள ஒற்றை இரட்டை இலக்கங்கள்)
இசக்கிமுத்து பிளேஸ் (9–39 வரையிலுள்ள ஒற்றை இரட்டை இலக்கங்கள்)

**வாக்களிப்பு நிலையம் (2) :** கொச்சிகடை, நியூன்கம் சதுக்கம், ரத்னம் ரோட்டிலுள்ள சனசமூகநிலையம்.

இவ்வாக்களிப்பு நிலையத்திற்கான வாக்காளர் இடாப்பிலுள்ளோர் இலக்கம் 3007 முதல் 5453 வரையும்.

**வாக்களிப்பு பிரதேசம் :**
ஜோர்ஜ் ஆர். டீ சில்வா மாவத்த (வடக்கு ஸ்கின்னர்ஸ் ரோட்) (37–214 வரையிலுள்ள ஒற்றை இரட்டை இலக்கங்கள்)
கல்பொத்த வீதி (5–77 வரையிலுள்ள ஒற்றை இலக்கங்கள்)
ஜம்பட்டா வீதி (5–239 வரையிலுள்ள ஒற்றை இலக்கங்கள்)
ஸ்ரீ போதிராஜ மாவத்த (சப்பத்து வீதி) 7–98 ஒற்றை இரட்டை இலக்கங்கள்)
ஸ்ரீ சிவானந்த மாவத்த (லஸ்கரின் வீதி ) (9–64 ஒற்றை இரட்டை இலக்கங்கள்)
ஸ்ரீமத் ராமனுதன் மாவத்த (கொட்டபோம் வீதி) (6–154 இரட்டை இலக்கங்கள்)

**முக்கிய கவனிப்பு:**—கதீற்றல் கல்லூரியில் (வா. நி. இல. 1) வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.)

டீ. டபிள்யூ. டீ. அல்விஸ்,
கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபர்.

கொழும்புக் கச்சேரி,
1970 ம் ஆண்டு டிசம்பர் 24 ம் நாள்.

12–1229

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக் குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்குத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்த தாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாதும் **அரசாங்க பிரசுராலய அதிபர்,** தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—அரசாங்க வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை—1971**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி .. | 8. 1.71 | வெள்ளி .. | 31.12.70 | வியாழன் .. | பி. ப. | 3.30 |
| | 15. 1.71 | வெள்ளி .. | 8. 1.71 | வெள்ளி .. | பி. ப. | 3.30 |
| | 22. 1.71 | வெள்ளி .. | 15. 1.71 | வெள்ளி .. | பி. ப. | 3.30 |
| | 29. 1.71 | வெள்ளி .. | 22. 1.71 | வெள்ளி .. | பி. ப. | 3.30 |
| பெப்ருவரி .. | 5. 2.71 | வெள்ளி .. | 29. 1.71 | வெள்ளி .. | பி. ப. | 3.30 |
| | 12. 2.71 | வெள்ளி .. | 3. 2.71 | புதன் .. | பி. ப. | 3.30 |
| | 19. 2.71 | வெள்ளி .. | 12. 2.71 | வெள்ளி .. | பி. ப. | 3.30 |
| | 26. 2.71 | வெள்ளி .. | 19. 2.71 | வெள்ளி .. | பி. ப. | 3.30 |
| மார்ச்சு .. | 5. 3.71 | வெள்ளி .. | 26. 2.71 | வெள்ளி .. | பி. ப. | 3.30 |
| | 12. 3.71 | வெள்ளி .. | 3. 3.71 | புதன் .. | ந. ப. | 12.00 |
| | 19. 3.71 | வெள்ளி .. | 10. 3.71 | புதன் .. | ந. ப. | 12.00 |
| | 26. 3.71 | வெள்ளி .. | 17. 3.71 | புதன் .. | ந. ப. | 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு திசெம்பர் மீ 1 ஆந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.